**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**09 அக்டோபர் 2015 / 25 துல்ஹஜ் 1436**

# ஹஜ்ஜிலிருந்து திரும்பிய பின் உறுதிமொழிகளை நிறைவேற்றுதல்

اَلْحَمْدُ للهِ الَّذِي جَعَلَ الشَّمْسَ ضِيَاءً وَالْقَمَرَ نُوْرًا، وَأَنْزَلَ الْقُرْآنَ لِلْمُتَّقِيْنَ ذِكْرًا، أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ، اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ صَلاَةً وَسَلاَمًا دَائِمَيْنِ إِلَى يَوْمِ تَجِدُ كُلُّ نَفْسٍ مَا عَمِلَتْ مُحْضَرًا .أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவும், அவன் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது ”தக்வா” எனும் பக்தியை அதிகரித்துக் கொள்வோமாக! நமது ”தக்வா” வின் உணர்வு, மகிழ்ச்சியையும் தொடர் அபிவிருத்திகளையும் வளங்களையும் நாம் அடைவதற்கு உதவியாக இருக்கட்டுமாக!

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

இவ்வருடம் ஹஜ்ஜுக் கடமை நிறைவேற்றப்பட்டு விட்டது. ஹாஜிகளில் சிலர் தமது நாடுகளுக்குத் திரும்பி விட்டார்கள். மற்ற சிலர், தமது நாடுகளுக்குத் திரும்ப தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு தான், ஹிஜிரி 10-வது ஆண்டில் நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களும் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களுடன் "ஹஜ்ஜதுல் விதா" எனப்படும் இறுதி ஹஜ்ஜை முடித்தவுடன் துல்ஹஜ் மாதத்தின் பிறை 14 அன்றே விரைவாக மதீனாவுக்குத் திரும்பி விட்டார்கள்.

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

புனித மக்கா நகரம் அல்லாஹ்வின் பூமியிலேயே ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுக்கு மிகவும் பிரியமான இடமாக இருந்தது. அது ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் தாய் நாடாகவும் பிறந்த இடமாகவும் இருந்தது. அங்கு ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள், அவர்களது மிகப் பெரிய குடும்பத்தார்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களால் மிகவும் அன்பாக வளர்க்கப்பட்டார்கள். மக்காவில் தான் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள், செய்யிததினா கதீஜா (ரலி) யைச் சந்தித்தார்கள். கதீஜா (ரலி) அவர்கள் சகிப்புத் தன்மை மிக்க உள்ளம் படைத்தவர்களாக இருந்தார்கள். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் இஸ்லாமியத் தூதைப் போதித்த போது சற்றும் சளைக்காமல் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து உதவினார்கள். மக்காவில் தான், கதீஜா (ரலி) யைத் திருமணம் செய்து கொண்டதன் மூலம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் குழந்தைப் பாக்கியங்களைப் பெற்றார்கள்.

”மக்கா” என்பது இறைத்தூதர் இப்ராஹிம் (அலை) மற்றும் அவர்களின் மகனார் இறைத்தூதர் இஸ்மாயீல் (அலை) அவர்களால் கட்டப்பட்ட இறையில்லமாகிய ”க∴பா” வின் நகரம் மட்டுமல்ல, நபி முஹம்மது(ஸல்) அவர்கள் இறைத்தூதுவத்துவம் வழங்கப்பட்ட நகரமும் அது தான். அங்குதான் அவர்களுக்கு முதன்முதலாக ”வஹீ” எனும் இறை ஞான உதயம் ஏற்பட்டது. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ள மற்றவர்களை அவர்கள் அழைக்க ஆரம்பித்ததும் அங்கிருந்து தான். மேலும், மக்கா நகரம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் உள்ளத்தில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுக்கு மக்காவிலிருந்து மதீனாவுக்கு இடம் பெயர வேண்டிய நிர்ப்பந்தமான நிலை ஏற்பட்ட போது அவர்கள் மக்காவை நோக்கி மனப்பூர்வமாகக் கூறிய பின்வரும் கருத்துக்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும்:

مَا أَطْيَبَكِ مِنْ بَلَدٍ وَأَحَبَّكِ إِلَيَّ وَلَوْلَا أَنَّ قَوْمِي أَخْرَجُونِي مِنْكِ مَا سَكَنْتُ غَيْرَكِ

பொருள்: ”மக்காவே! நீ தான் நகரங்களிலேயே சிறந்த நகரமாக இருக்கின்றாய். எனக்கு மிகவும் பிடித்தமான நகரமாக இருக்கின்றாய். என்னை எனது சமூக மக்கள் உன்னிடமிருந்து வெளியாக்க வில்லையெனில் நான் உன்னை விட்டு வேறு எங்கும் சென்றிருக்கமாட்டேன்” (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்)

ஜமாஅத்தார்களே! ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள், தான் பிறந்த இடமாகிய மக்காவை எந்தளவு ஆழமாக நேசித்துள்ளார்கள் என்பதைக் கவனியுங்கள். எனினும், ஹிஜிரி 10-வது ஆண்டில் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றி முடித்ததும் உடனேயே மக்காவிலிருந்து மதீனாவுக்குத் திரும்பி விட்டார்கள். உண்மையில், அவர்கள் மக்காவில் தங்கவில்லையென்பது மட்டுமல்ல, ஹஜ்ஜுக் கடமையின் நாட்களை விட அதிகமான நாட்கள் கூட அவர்கள் அங்கு தங்கவில்லை. "அய்யாமுத் தஷ்ரீகின்" மூன்றாவது தினத்தில் துல்ஹஜ் பிறை 14-ல் உடனடியாக மதீனாவுக்குத் திரும்பி விட்டார்கள்.

மக்காவை விட்டு மதீனாவுக்குச் சென்று பத்து வருடங்கள் ஆகி விட்டதால் மக்காவை அவர்கள் மறந்து, அதனை விட்டு விட்டார்களா? மக்காவைப் பற்றி அவர்களின் உள்ளத்தில் காணப்பட்ட அன்பு மறைந்து விட்டதா? என்றால் நிச்சயம் இல்லை.

மக்காவின் மீதான அன்பு இறைத்தூதர்(ஸல்) அவர்களின் உள்ளத்தில் தொடர்ந்து இருந்தது. எனினும், தனது தூதை பொறுப்பாக மக்களிடம் எடுத்துரைக்க வேண்டுமென்ற சிந்தனையானது அவர்களின் உள்ளத்தில் காணப்பட்ட மக்காவின் மீதான அன்பை விட அவர்களுக்கு முக்கியமாகத் தென்பட்டது. மதீனாவின் மக்களுக்குக் கொடுத்த வாக்குகளையும் ஒப்பந்தங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்று அவர்களின் உள்ளத்தில் காணப்பட்ட சிந்தனையானது, அவர்களின் உள்ளத்தில் காணப்பட்ட மற்ற உணர்வுகளை மிகைத்து, அவற்றைக் கட்டுப்படுத்தியது.

இவ்வுண்மையை, "ஹஜ்ஜதுல் விதா" வுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற ஃபத்ஹு மக்கா எனப்படும் மக்கா வெற்றி நிகழ்ச்சியின் மூலம் நாம் அறியலாம். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மக்காவைக்

கைப்பற்றி, அதில் வெற்றிகரமாக நுழைந்த போது, இனிமேல் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் மதீனாவுக்குத் திரும்பமாட்டார்களோ என அவர்களின் மதீனா நகரத் தோழர்கள் அஞ்சினார்கள். காரணம், மக்காவைப் பற்றி ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் உள்ளத்தில் காணப்பட்ட ஆழமான அன்பை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அந்த மதீனா நகரத் தோழர்களின் கவலையைப் புரிந்து கொண்டார்கள். எனவே, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தனது மதீனா நகரத் தோழர்களையெல்லாம் ஒன்று சேர்ந்து: ”தனது தாய் நாட்டின் மீதான அன்பின் காரணமாக, அத்தாய் நாட்டின் பக்கம் அழைத்துச் செல்லப்படும் நபர்களில் ஒருவராக நான் ஆகி விடுவேன் என நீங்கள் நினைக்கின்றீர்களா?” என்று கேட்டார்கள்.

”அப்படித்தான் நாங்கள் உண்மையாக நினைக்கின்றோம்” என்று அத்தோழர்கள் கூறினார்கள். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள்:

كَلَّا إِنِّي عَبْدُ اللَّهِ وَرَسُولُهُ هَاجَرْتُ إِلَى اللَّهِ وَإِلَيْكُمْ وَالْمَحْيَا مَحْيَاكُمْ وَالْمَمَاتُ مَمَاتُكُمْ

பொருள்: ”விஷயம் நீங்கள் நினைப்பது போல் அல்ல. நான் அல்லாஹ்வின் அடியாராகவும் அவனது தூதராகவும் இருக்கின்றேன். நான் அல்லாஹ்வின் பக்கமும் உங்கள் பக்கமும் ”ஹிஜ்ரத்” (தியாகப் பயணம்) செய்துள்ளேன். நான் உயிர் வாழ்வதும் மரணிப்பதும் உங்களுடன் தான்” என உறுதியாகக் கூறினார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்களின் இப்பதிலைக் கேட்டதும் மதீனா நகரத் தோழர்கள் அழுதார்கள்; ஆனந்தக்

கண்ணீர் வடித்தார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

தனது மதீனா நகரத் தோழர்கள் விஷயத்தில் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் இந்த அளவு பொறுப்புணர்வுடன் நடந்துள்ளார்கள். மதீனா நகரத் தோழர்கள் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களை மதீனாவுக்கு வரும் படி அழைத்த போது, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களைப் பாதுகாப்பதாக உறுதிமொழி எடுத்திருந்தார்கள். மதீனா நகர அன்ஸாரித் தோழர்கள் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுக்காகத் தமது வாழ்வையும் செல்வங்களையும் அர்ப்பணித்தார்கள்.

மற்றவர்கள் தனக்காகச் செய்த அரும் பெரும் தியாகத்தை ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களும் நன்கு உணர்ந்திருந்தார்கள். தனது தாய் நாடாகிய மக்காவுக்குத் திரும்ப வேண்டுமென்ற உணர்வு அவர்களிடம் உறுதியாகக் காணப்பட்ட போதிலும், ”மதீனாவிருந்த தனது அன்ஸாரித் தோழர்களுடன் தான் இருப்பேன்” எனக் கூறிய அவர்கள் தனது வாக்கைக் காப்பாற்றினார்கள்.

இவ்வாறு இறைத்தூதர்(ஸல்) அவர்களின் பண்புகள் மிகச் சிறந்ததாக இருந்தன. மேற்கண்ட நிகழ்ச்சியில் நாம் நமது வாழ்க்கைக்குப் பெற வேண்டிய பாடங்கள் ஏராளமாக உள்ளன. அவற்றில் சில பின்வருமாறு:

**முதன்முதலாக**, தனது சமூகத்தின் நலன் தான் மற்ற எல்லா விஷயங்களை விட இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு முக்கியமாகத் தென்பட்டது. அல்லாஹ் திருக்குர்ஆனின் ”அத்-தவ்பா” எனும் அத்தியாயத்தின் 128-வது வசனத்தில் கூறுகின்றான்:

لَقَدۡ جَآءَكُمۡ رَسُولٞ مِّنۡ أَنفُسِكُمۡ عَزِيزٌ عَلَيۡهِ مَا
عَنِتُّمۡ حَرِيصٌ عَلَيۡكُم بِٱلۡمُؤۡمِنِينَ رَءُوفٞ رَّحِيمٞ ١٢٨

பொருள்: (பாருங்கள்!) உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். நீங்கள் துன்பத்திற்காளாவது அவருக்குக் கடினமாக இருக்கிறது. மேலும், உங்களுடைய வெற்றியில் பேராவல் கொண்டவராகவும், நம்பிக்கையாளர்கள் மீது அதிகப் பரிவும், கருணையும் உடையோராகவும் இருக்கின்றார்.

**இரண்டாவதாக**, நமது உள்ளத்திலுள்ள உணர்வுகள், ஆசைகளை விட நாம் கொடுத்த வாக்குறுதிகளும் நமது கடமைகளும் தான் நமக்கு முக்கியமாகத் தென்பட வேண்டும். உணர்வுகளும் உணர்ச்சிகளும் ஒருவரை நன்மைக்காகப் பாடுபடுவதை விட்டும் தடுத்து விடக் கூடாது.

ஒரு முஃமின் (இறை நம்பிக்கையாளர்) தனது உள்ளத்தை பலஹீனமாகும் படி விட்டு விடக் கூடாது. உணர்வுகள் மற்றும் நினைவுகள் எனும் அலைகளால் அடித்துச் செல்லப்படும் வகையில் விட்டு விடக் கூடாது. அதன் காரணமாக, சவால்களை எதிர்கொள்ளும் போது சகிப்புத் தன்மையையும் உறுதியான நிலைப்பாட்டையும் இழந்து விடக் கூடாது. அவ்வாறே, ஒரு முஃமினின் செயல்பாடுகள் அவரது உணர்ச்சிகளால் மட்டும் வழி நடத்தப்படக்கூடாது. அவ்வாறு நிகழ்ந்தால் அது அவரது நீதமானத் தீர்ப்பையும் பகுத்தறிவையும் மறைத்து விடும். அந்நிலையில், அவரது செயல்கள் அழிவுக்குக் காரணமாகி விடும். முஸ்லிம்கள் தமது வாழ்க்கையில் மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் காண்பதற்கு கல்வி,

நற்பண்புகள் மற்றும் தெளிவான கொள்கைகளால் அவர்கள் வழி நடத்தப்பட்டு, அறிவுப்பூர்வமாக செயல்பட வேண்டுமெனப் போதிக்கப் பட்டுள்ளார்கள்.

**மூன்றாவதாக**, மக்காவின் மகத்துவமும் புனிதத்துவமும் முஃமின்களின் மகத்துவம் மற்றும் புனிதத்தை விட மிகைத்து விடக் கூடாது. "கஃபத்துல்லாஹ்" முஸ்லிம்களின் "கிப்லா" வாக, முன்னோக்கித் தொழும் இறை இல்லமாக இருந்த போதிலும், முஸ்லிமின் மான மரியாதையானது அதை விடச் சிறப்பு வாய்ந்ததாகும். ஒருமுறை இறைத்தூதர்(ஸல்) அவர்கள் "கஃபத்துல்லாஹ்" வை முன்னோக்கி பின்வருமாறு கூறினார்கள்:

கஃபாவே! உனக்கு வாழ்த்துக்கள் உண்டாகட்டுமாக! நீ எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக இருக்கின்றாய்! உனது மரியாதை எவ்வளவு உயர்வாக உள்ளது! எனினும், ஒரு முஃமினின் மரியாதை அல்லாஹ்வின் பார்வையில் உன்னை விடச் சிறந்ததாகும். அல்லாஹ் உன் விஷயத்தில் ஒன்றை மட்டுமே செய்யக் கூடாதெனத் தடுத்துள்ளான் (அதாவது உன்னை இடித்து அழிக்கக்கூடாது எனத் தடுத்துள்ளான்). ஆனால் முஃமினின் விஷயத்தில் அல்லாஹ் மூன்று விஷயங்களைப் பாதுகாத்துள்ளான். அவரது உயிர், அவரது செல்வம் போன்றவற்றை அழிக்கக் கூடாது எனப் பாதுகாத்துள்ளான்; அத்துடன் அவரைப் பற்றி தவறான எண்ணங்கள் கொள்வது கூடாது எனவும் கூறியுள்ளான். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் பைஹகீ ரஹ்)

சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் மேன்மையானவன்), இவ்வாறு, "கஃபா" வை விட முஃமினின் உரிமைகளுக்கு ரசூலுல்லாஹி(ஸல்) முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். ஒரு முஃமினின் மரியாதையைப் பாதுகாப்பதானது "கஃபா" வின் புனிதத்தை விடச் சிறந்தது எனவும் கூறியுள்ளார்கள். எனவே,

அழிவுக்கும், முஸ்லிம்களுக்கிடையே இரத்தத்தைச் சிந்துவதற்கும் காரணமாக இருக்கக் கூடிய போர்களில் கலந்து கொள்ளுமாறு ஆர்வமூட்டப்படுபவர்கள் மேற்கண்ட கருத்துக்களை கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்றுக்குப் பல தடவைகள் சிந்திக்க வேண்டும். அப்போது தான், அல்லாஹ்வால் வெறுக்கப்பட்ட செயல்களில் அவர்கள் சிக்கிக் கொள்ளாமல் இருக்க முடியும்.

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் தியாகத்தையும், அவர்கள் தனது தோழர்கள் மீதும் தனது சமூகத்தின் மீதும் கொண்டிருந்த அன்பையும் நன்றாகப் புரிந்து கொண்ட உம்மத்தினராக நாம் ஆகுவோமாக! முன்னேறுவதற்கான துணிவும் நம்பிக்கையும் கொண்ட சமுதாயமாக ஆகுவதற்கான ஆற்றலை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! உணர்ச்சிகளால் பலஹீனமான, தமது உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு தீவிரமாகச் செயல்பட்டதன் காரணமாக குழம்பிப் போன சமுதாயமாக நாம் ஆகாதிருப்போமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.